# வெற்றிட அறிவித்தல்

# மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு

**மத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் பிரதிப் பணிப்பாளர் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரல்**

மத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் பிரதிப் பணிப்பாளர் (கண்டி மற்றும் நுவரெலியா) பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக தற்போது அரச சேவையில் மற்றும் மாகாண அரச சேவையில் பணிபுரியும் இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை தரம் II ஐச் சேர்ந்த தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **தகைமைகள்**

I. இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் தரம் **II** இல் குறைந்தது 05 வருட உயிர்ப்பான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருக்கும் உத்தியோகத்தராக இருத்தல்.

II. தற்போது அரச சேவை / மாகாண அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்களிடம் இருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுவதால் வயது எல்லை ஏற்புடையதன்று.

III. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

IV. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 01/2020 மற்றும் 01/2020(I) ஆம் இலக்க சுற்றறிக்கைகளில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய ஒழுக்காற்று தண்டனைகளுக்கு உட்படாதிருத்தல்

02. **ஆட்சேர்ப்புமுறை**

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை தரம் II ஐச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுள், மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழு ஒன்றினால் நடாத்தப்படும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய, அதிக புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் இவ்வெற்றிடப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார். .

(அங்கீகரிக்கப்பட்ட புள்ளிகள் வழங்கும் திட்டம் www.psc.cp.gov,lk என்ற இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது)

குறிப்பு: - தகைமைகளை உறுதிப்படுத்தும் அனைத்து சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடன், தேசிய ஆளடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

03. **விண்ணப்பிக்கும்முறை**

- முறையாகவும் சரியாகவும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை திணைக்களத் தலைவர் மற்றும் உரிய அமைச்சின் செயலாளரினூடாக (மாகாண சபையிற்கு உள்ளீர்க்கப்பட்ட உத்தியோகத்தராயின் தனது விண்ணப்பத்தை மாகாண அமைச்சின் செயலாளர் மற்றும் பிரதான செயலாளர் ஆகியோரின் விதந்துரையுடன்) **"செயலாளர், மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு, இல. 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி"** என்ற முகவரிக்கு **2025.07.25** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பத்தினை இட்டு அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் **"மத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்"** எனத் தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.
- விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் மற்றும் பூரணமின்றியும் கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.
- தாமதமாக கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் மற்றும் தொலைந்த விண்ணப்பங்கள் பற்றிய முறைப்பாடுகளை மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு பொறுப்பேற்க மாட்டாது.

(மாதிரி விண்ணப்பப்படிவத்தை www.psc.cp.gov,lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.)

04. இவ் ஆட்சேர்ப்பு சம்பந்தமாக இங்கு குறிப்பிடாத ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுச் சார்ந்ததாகும்.

05. இதன் சிங்களம், தமிழ், மற்றும் ஆங்கில மொழிகளிலுள்ள அறிவித்தலுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள அறிவித்தலே மேலோங்குதல் வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

கை/இ :சுஜானி ஆர் விஜேதுங்க,
செயலாளர் (பதில்),
மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,

2025 ஜூன் 24 ஆம் திகதி
மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுக் காரியாலயத்தில்,